//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:CC.No.78/2023**

**prosecution witness: PW-1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

A1, A2 present

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஈஸ்வரன் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**<u>02.02.2024</u>**

<u>முதல் விசாரணை:</u>

1. நான் மண்டபத்தில் ஓம்சக்தி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடநத் 26.06.2022-ம் தேதி காலை சுமார் 07.45 மணியளவில் நான் மண்டபம் கேம்ப் கொடிமரம் அருகே வேலைக்கு செல்வதற்காக நின்று கொண்டிருந்தபோது 1ம் எதிரி அங்கு வந்து என்னை கட்டையால் பின் கழுத்தில் அடித்துவிட்டார். 2ம் எதிரி என்னை தேவடியா மகனே சிகரெட் கேட்டா வாங்கி தரமாட்டியா என்று அசிங்கமாக பேசி கல்லால் எனது இடது பக்க கன்னத்தில் காதோரத்தில் அடித்துவிட்டார். எனது காது கேட்காமல் போய் விட்டது.

2. இந்த சம்பவத்தை என் அத்தை வசந்தி, மாமா விஜயக்குமார் மற்றும் எனது பெரியப்பா முருகன் ஆகியோர்கள் பார்த்து எதிரிகளை விலக்கிவிட்டார்கள். பின்பு காயம்பட்ட என்னை மண்டபம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். பின்பு மேல்சிகிச்சைக்காக அங்கிருந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் சிகிச்சையில் இருந்தபோதுமண்டபம் காவல்நிலைய போலீசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1.நான் குடியிருக்கும் பகுதிக்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம்

இருக்கும் என்றால் சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். காயம் ஏற்பட்டதால் நான் மயக்கநிலையில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பபவம் பற்றிய விபரங்கள் அனைத்தும் விஜயக்குமார் என்பவர்தான்போலீசிடம் சொன்னார் என்றால் சரிதான். நான் மயக்கநிலையில் இருந்தபோது போலீசார் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஒரு கையெழுத்து அந்த பேப்பரில் வாங்கினார்கள்.

2. எனக்கும், எதிரிகளுக்கும் பாட்டில் விற்பது சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான் அதை நாங்கள் பேசி முடித்துவிட்டோம். நானும், மாமா விஜயக்குமார் மற்றும் சிலருடன் சேர்ந்து சம்பவத்தன்று கேம்ப் பகுதிக்கு வந்து 1ம் எதிரி சக்தியை தாக்கினோம் என்றால் சரியல்ல. சக்தி என்பவருக்கு ஒரு கை கிடையாது ஊனமுற்றவர் என்றால் சரிதான். அதனால் நான் தான் அவரை தாக்கிவிட்டு மதுபோதையில் ஓடும்போது அருகில் இருந்த போஸ்ட்மரத்தில் மோதியதால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3. இந்த வழக்கு சம்பந்தமாக பின்னிட்டு என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெற்றார்களா என்றால் இராமநாதபுரம் மருத்துவமனைக்கு சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து வந்து விசாரித்தார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், என்னை பாட்டில் விற்கவிடாமல் சக்தியும், அவரது தம்பி சரவணனும் போலீசாரிடம் அடிக்கடி புகார் கொடுத்ததால் அதனை மனதில் வைத்துதான் நான் ஊனமுற்ற நபர் சக்தியை தாக்கிவிட்டு மதுபோதையில் அருகில் இருந்த போஸ்ட்டில மோதி அதனால் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது, நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்